www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுத் தேர்வு - 2024

10- ஆம் வகுப்பு

பதிவு எண்

## தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : 1. மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

2. விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

3. தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 X 1 = 15

1. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ..................
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

3. இருக்கும் போது உருவமில்லை, இது இல்லாமல் உயிரினம் இல்லை - சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க
அ) காடு ஆ) விண்மீன் இ) நறுமணம் ஈ) காற்று

4. "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவுக்கு "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடை அளிப்பது ........................
அ) உற்றது உரைத்தல் விடை ஆ) வினாஎதிர் வினாதல் விடை இ) ஏவல் விடை ஈ) சுட்டு விடை

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6. ரவீந்திரநாத் தாகூர் வங்கமொழியில் எழுதிய கீதாஞ்சலியை எந்த மொழியில் மொழி பெயர்த்த பிறகு அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது?
அ) தமிழ் ஆ) ஜெர்மன் இ) ஆங்கிலம் ஈ) வடமொழி

7. அருந்துணை என்பதைப் பிரித்துப் பார்த்தால் ...........
அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

8. 'பெப்பர்' என்ற இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு ..........
அ) ஜப்பான் ஆ) சீனா இ) இந்தியா ஈ) அமெரிக்கா

9. "சென்றான் முருகன்" என்ற தொடரைப் பெயரெச்சத் தொடராக மாற்றுக.
அ) முருகன் சென்றான் ஆ) சென்ற முருகன் இ) சென்று வந்தான் ஈ) முருகா செல்

10. பெரிய மீசை சிரித்தார் - இச்சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

11. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ..........
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13,14, 15) விடையளிக்கவும்.

*வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்*
*பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்*
*மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ*
*ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்*

12. இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ) நப்பூதனார் ஈ) கீரந்தையார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம் இ) திருவிளையாடல் புராணம் ஈ) கம்பராமாயணம்

14. "பொய்யோவெனு மிடையாளொடு மிளையானோடும் போனான்" - என்ற அடிகளில் இடையாள் இளையான் என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
அ) சீதை, பரதன் ஆ) சீதை, குகன் இ) சீதை, ராவணன் ஈ) சீதை, லட்சுமணன்

15. இப்பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
அ) வெய்யோனொளி, பொய்யோவெனும் ஆ) வெய்யோனொளி, தன்மேனியின்
இ) ஐயோவிவன், வடிவென்பது ஈ) மிடையாளொடும், மிளையானொடும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 4 X 2 = 8
**[21- வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்]**

16. 'சதாவதானி' என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) காற்றாலை உற்பத்தி செய்வதில் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.
ஆ) பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் 1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

18. வசன கவிதை - குறிப்புவரைக.

19. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

20. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.

21. 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 X 2 =10

22. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ) காட்டு விலங்குகளைச் ...... தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ...... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
ஆ) பசுமையான ........ஐக் ......... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

23. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**
அ) மடு - மாடு ஆ) இயற்கை - செயற்கை

24. **கலைச்சொல் தருக.**
அ) Storm ஆ) Thesis

25. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரை இணைத்து எழுதுக.**
அ) கலையரங்கத்தில் எனக்காக காத்திருக்கின்றார். அவரை அழைத்து வாருங்கள்.
ஆ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

26. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

27. ***அடிக்கோடிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.***
தங்கமீன்கள், தண்ணீர்த் தொட்டியில் விளையாடுகின்றன.

28. **தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**
அ) வெயிலில் அலையாதே உடல் ........... விடும்.
ஆ) ........... மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பகுதி - III

### பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

29. பூவின் நிலைகள் யாவை?

30. தமிழ் மொழிக்காக கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராம பாண்டியர். தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த இவர் இயற்றிய நூலே காசிக்கண்டம். இவரின் மற்றொரு நூலான 'வெற்றி வேற்கை' என்றழைக்கப்படும் 'நறுந்தொகை' சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது. சீவலமாறன் என்ற பட்டப் பெயரும் இவருக்கு உண்டு.

அ) முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர் யார்?

ஆ) வெற்றி வேற்கையின் வேறு பெயர் என்ன?

இ) அதிவீரராம பாண்டியரின் பட்டப் பெயர் எது?

### பிரிவு- 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

**(34- வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "விருந்தினனாக.." எனத் தொடங்கும் காசிக் காண்டம் பாடல்.

*(அல்லது)*

ஆ) "அருளைப் பெருக்கி..." எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

35. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.

| | | |
|---|---|---|
| அண்ணன் | : | எங்கே செல்கிறாய்? (தொடர் மொழி) |
| தம்பி | : | .......... (தனி மொழி) |
| அண்ணன் | : | .......... வாங்குகிறாய்? (தொடர்மொழி) |
| தம்பி | : | ............. (தொடர் மொழி) |
| அண்ணன் | : | ............ (தனி மொழி) |
| தம்பி | : | ............ (தொடர்மொழி) |

37. வேலோடு நின்றான் இடுவென்றது போலும்
கோலோடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 X 5 = 25**

38. அ) தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவமனைக்கும் உள்ள தொடர்பு குறித்து விரித்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. *(அல்லது)*

ஆ) உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



M.Poovarasan M.Sc B.Ed
PG Asst in Chemistry
Dharmapuri district

41. சேலம் மாவட்டம், வள்ளல் நகர், சேக்கிழார் தெரு, 21 ஆம் இலக்க வீட்டில் வசித்து வரும் இனியவன் மகள் இலக்கியா நூலகத்திற்கு உறுப்பினராக சேர இருக்கிறார். தேர்வர் தன்னை இலக்கியாவாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) நடப்பு உலகில் இருக்காமல் சமூக ஊடகங்களுடன் இயங்கிக் கொண்டிருப்பவர்களை நெறிப்படுத்தி, நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக. *(அல்லது)*

*ஆ) மொழிபெயர்க்கவும்.*

i) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. - **Nelson Mandela**.

ii) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. - **Rita Mae Brown**

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 X 8 = 24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி- பிற மொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிற துறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழி தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக்கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

44. அ) அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. *(அல்லது)*

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கு அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைக் கொண்டு கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

***********



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# நூலக உறுப்பினர் படிவம்

............................................................................ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ............................................................................

## உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1. பெயர் : ............................................................................

2. தந்தை பெயர் : ............................................................................

3. பிறந்த தேதி : ............................................................................

4. வயது : ............................................................................

5. படிப்பு : ............................................................................

6. தொலைபேசி எண் : ............................................................................

7. அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) : ..................................................

நான் ............................................................................ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ.................................சந்தா தொகை ரூ. ................................ ஆக மொத்தம் ரூ. .................................... ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : தங்கள் உண்மையுள்ள

நாள் :

திரு / திருமதி / செல்வி / செல்வன் ............................................................................ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

( பதவி மற்றும் அலுவலகம் )

( மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள் )

அலுவலக முத்திரை

www.Padasalai.Net